# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு III - 2018

### சான்று மற்றும் குற்றவியல் நடபடிமுறைச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

<u>நான்கு (04)</u> வினாக்களுக்கு <u>மட்டும்</u> விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. "அடிப்படை விதியானது சுருக்கமாக பிணை, மறியல் அல்ல எனச் சொல்லப்படலாம்."

   பிணைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவைகளுடன் தொடர்புறுத்தி மேலுள்ள கூற்றை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

2. " 'எவரேனும் ஆளொருவர் குற்றஞ் சாட்டப்படும் ஒவ்வொரு வேறுபட்ட குற்றத் தவறுக்கும் வேறான குற்றச்சாட்டொன்று இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஒவ்வொரு குற்றச்சாட்டும் வேறாக விசாரிக்கப்படுதல் வேண்டும் என்பது' பொதுவான விதியாக இருந்தாலும், குற்றவியல் நடபடிக் கோவைச் சட்டமானது இப் பொதுவான விதிக்கு விசேட விலக்களிப்புகளை அங்கீகரித்துள்ளது."

   குற்றவியல் புலன்விசாரணைகளை (investigations) நடாத்துவது தொடர்பான குற்றவியல் நடபடிக் கோவைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளின் உதவியுடன் இக் கூற்றை ஆராய்க.

3. (அ) அல்லது (ஆ) இற்கு விடையளிக்க:

   (அ) புலன்விசாரணைகளானவை (investigations), குற்றத்தவறொன்று புரியப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்துவது, அக் குற்றத்தவறுக்குப் பொறுப்பானவர்கள் மற்றும் அவ்வாறு பொறுப்பானவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் (charges) தாபிப்பதற்கான சான்றினை சேகரிப்பது என்பவைகளை நோக்கியதாக நடாத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், நியாயமான விசாரணையொன்றை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகள் சான்றுக் கட்டளைச் சட்டம் மற்றும் நடபடிச் சட்டம் ஆகிய இரண்டிலும் காணப்படுகின்றன.

   நியதிச் சட்டத்தின் / நியதிச் சட்டங்களின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவைகளுடன் தொடர்புறுத்தி கருத்துரை செய்க.

அல்லது

(ஆ) இலங்கை அரசியலமைப்பின் 'அத்தியாயம் III' குற்றமற்றவர் என்ற ஊகக் கோட்பாட்டை அங்கீகரிப்பதுடன், தனியாளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கு நியாயமான வழக்கு விசாரணைக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்குமாக நடபடிமுறை குற்றவியல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் வினைத்திறனுள்ள பொறிமுறையொன்றை இடுகின்றது.

மேலுள்ள கூற்றை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

4. இலங்கையில் 'மரண வாக்குமூலமொன்றின்' (dying declaration) ஏற்புடைமைக்கான நிபந்தனைகளை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க.

உமது விடையானது பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

5. (அ) அல்லது (ஆ) இற்கு விடையளிக்க:

(அ) குற்றவியல் பொறுப்புடைமைக்கான பொதுவான மற்றும் விசேட விலக்களிப்புகளை எண்பிப்பது உட்பட குற்றவியல் வழக்குகளில் எண்பிப்புப் பொறுப்பு மற்றும் எண்பிப்புத் தராதரம் என்பவைகளுடன் விசேடமாகத் தொடர்புறுத்தி சான்றுக் கட்டளைச் சட்டத்திலுள்ள எண்பிப்புத் தொடர்பான ஏற்பாடுகளை ஆராய்க.

அல்லது

(ஆ) சுனில் என்பவனைக குத்திப் படுகொலை (murder) செய்ததற்காக நிமால் என்பவன் குற்றஞ் சாட்டப்படுகின்றான். பின்வருவனவற்றை வழக்குத்தொடுநர் தரப்பு சான்றாக நெறிப்படுத்த முயற்சிக்கலாமா?

(i) நிமாலினால் புரியப்பட்ட சில சட்ட விரோத செயற்பாட்டிற்கு எதிராக பொலிசுக்கு தகவலினை சுனில் வழங்கியுள்ளான் என்பதுடன் நிமால் அது பற்றி அறிந்திருந்தான்;

(ii) முதல்நாள் கத்தியொன்றை நிமால் கொள்வனவு செய்துள்ளான்;

(iii) நிமால் பொலிசாருக்குக் கூற்றொன்றைச் செய்துள்ளான் என்பதுடன், அதனைத் தொடர்ந்து கத்தியொன்று கண்டெடுக்கப்பட்டது;

(iv) சாட்சியாளர்களில் ஒருவரின் வதிவிடத்தைக் கடந்து சென்ற சிலர் நிமால் சுனிலைக் குத்திவிட்டான் என சொல்வதைக் கேட்டனர்; மற்றும்

(v) அவனது இறப்பிற்கு முன்னர், நிமால் தன்னைக் குத்தி விட்டதாக சுனில் பொலிசாருக்கு தெரிவித்துள்ளான்.

6. பியதாசா (குற்றஞ் சாட்டப்பட்டவன்) கூரான வெட்டும் ஆயுதமொன்றால் அவனை வெட்டி சியாடொரிஸின் (இறந்தவன்) இறப்பை ஏற்படுத்தியதற்காக மேல்நீதிமன்றத்தின் முன்னால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளான். பியதாசாவிற்கு எதிரான வழக்கு விசாரணையில் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இயைபான நிகழ்வுகளாக பின்வரும் சான்றுப் பகுதிகள் முன்வைக்கப்படலாமாவென உமது ஆலோசனையை வழக்குத்தொடுநர் தரப்பு கோருகின்றது:

(i) இறந்தவனின் மனைவி கூறுவதன்படி, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கும் இறந்தவனுக்கும் இடையே காணிப் பிணக்கொன்று தொடர்பாக பகைமையொன்று இருந்து வந்ததுடன் அப் பிணக்கு தொடர்பாக பின்னையவன் முன்னையவனுக்கு எதிராக வழக்கொன்றைத் தொடர்ந்திருந்தான். சம்பவத்திற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், குற்றஞ்சாட்டப்பட்டவன் இறந்தவனின் இடத்திற்கு வந்ததுடன் அவ் வழக்கானது மீளப்பெறப்படாவிட்டால் அவனைக் கொல்வதாக அச்சுறுத்தியுமிருந்தான்.

(ii) 'ஹொடஹித்த ஸ்ரோர்ஸின்' சொந்தக்காரன் சம்பவ தினமன்று காலை குற்றஞ்சாட்டப்பட்டவன் தனது ஸ்ரோர்ஸிற்கு வந்து கூரான வெட்டும் மன்னா கத்தியொன்றைக் கேட்டதாகவும் அதிலொன்றை வாங்கியதாகவும் தெரிவிக்கின்றான். சாட்சியான ஹிரிகோத என்பவன் அச் சம்பவத்தின் சிறிது நேரத்தின் பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவன் கத்தியொன்றை (அது இரத்தக்கறை படிந்திருந்ததை அவன் தெளிவாகக் கண்டான்) பற்றையொன்றின் பின்னால் ஒளிப்பதைத் தான் கண்டதாகத் தெரிவிக்கின்றான்.

(iii) சம்பவத்திற்கு ஏறத்தாழ ஒருவாரத்திற்கு முன்னர் குற்றஞ்சாட்டப்பட்டவன் இறந்தவன் மீது குறிதுப்பாக்கியால் சுட்டானெனவும், ஆனால் சூடு குறிதவறியதால் இறந்தவனுக்கு தீங்கெதுவும் ஏற்படவில்லை எனவும் சாட்சியான கிரிநெய்ட தெரிவிக்கின்றான். சம்பவ காலத்தின் போது குணபால என்பவனைச் சுட்டுக் கொல்ல முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு எதிராக கொலை முயற்சி வழக்கொன்று இருந்து வந்ததாகவும் சாட்சியாளர் தெரிவிக்கின்றார்.

(iv) சம்பவ இடத்தில் போராட்டம் நடாத்தியதற்கான அடையாளங்களையும் இரத்தக் கறைகளையும் புலன்விசாரணை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர் அவதானித்துள்ளார் என்பதுடன், சம்பவத்திற்குப் பின்னர் குற்றஞ் சாட்டப்பட்டவன் கிராமத்திலிருந்து தப்பி ஓடிவிட்டானெனவும் காடு ஒன்றில் ஒளித்திருந்த போது மூன்று நாட்களின் பின்னர் கைது செய்யப்பட்டானெனவும் தெரிவிக்கின்றார். குணபால என்பவனைக் கொல்ல முயற்சித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு எதிராக வழக்கு ஒன்று இருந்து வந்தது என்பதனை அவரும் உறுதிப்படுத்துகின்றார்.

7. குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவரால் செய்யப்பட்ட குற்ற ஒப்புதலொன்று சான்று கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட பாதுகாப்பிற்கு அமைவாக குற்றவியல் வழக்கு விசாரணை ஒன்றில் அனுமதிப்படக்கூடியது.

பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகளுடனும் இலங்கையில் தீர்க்கப்பட்ட வழக்குகளுடனும் தொடர்புறுத்தி மேலுள்ள கூற்றின் வலிதாந் தன்மையை நுணுக்கமாகப் பரீட்சிர்க்க.

[redacted]

# UNIVERSITY OF COLOMBO, SRI LANKA
# FACULTY OF LAW

## BACHELOR OF LAWS EXAMINATION, YEAR III – 2018

## Law of Evidence and Criminal Procedure

(Three Hours)

Total Number of Questions: **07**

Answer **FOUR (04)** questions and **no more.**
(Candidates will be penalized for illegible handwriting.)

1. "The basic rule may perhaps be tersely put as bail, no jail."

   Critically evaluate the above statement with reference to relevant provisions of the Bail Act and decided cases.

2. "Although the general rule is that 'for every distinct offence for which any person is accused of, there shall be a separate charge and every such charge shall be tried separately', the Code of Criminal Procedure Act, has recognized specific exceptions to the general rule."

   Discuss this statement with the aid of legal provisions in the Code of Criminal Procedure Act, relating to the conduct of criminal investigations.

3. Answer (a) or ( b)

   (a) Investigations are directed towards ascertaining whether an offence is committed; those responsible for the offence and gathering evidence to establish charges against those responsible. However, provisions ensuring a fair trial are seen both in the Evidence Ordinance and the procedural law.

   Comment with reference to relevant provisions of the statute/s and decided cases.

   OR

(b) 'Chapter III' of the Constitution of Sri Lanka recognizes the principle of presumption of innocence,and places an effective mechanism in the implementation of procedural criminal law to protect the individual liberty and to ensure the right to fair trial to an accused person.

Critically analyse the above statement.

4. Critically analyze the conditions of admissibility of a 'dying declaration' in Sri Lanka. Your answer must be supported with relevant statutory provisions and decided cases.

5. Answer (a) or (b)

(a) Discuss the provisions relating to proof in the Evidence Ordinance with special reference to the burden of proof and the degree of proof in criminal cases including proof of general and special exemptions to criminal liability.

OR

(b) Nimal is charged with the murder of Sunil by stabbing. Could the prosecution seek to lead in evidence the following?

i. Sunil had provided information to the police against some illicit activity by Nimal and that Nimal was aware of it;
ii. Nimal had purchased a knife the previous day;
iii. Nimal had made a statement to the police , consequence to which a knife had been recovered;
iv. Some persons who were passing the residence of one of the witnesses were heard stating Nimal had stabbed Sunil; and
v. Before his death, Sunil had informed the police that Nimal stabbed him

6. Piyadasa (the accused) stands indicted before the High Court, for causing the death of Siyadoris (the deceased), by cutting him with a sharp cutting instrument. Prosecution seeks your advice as to whether the following pieces of evidence could be led as relevant facts, at the trial against Piyadasa, under the provisions of the Evidence Ordinance:

   (i) According to the wife of the deceased, an animosity existed between the accused and the deceased over a land dispute, over which the latter had filed a case against the former. Three weeks prior to the incident, the accused had come to the deceased' s compound and had threaten to kill him if the case was not withdrawn;

   (ii) Owner of 'Hodahitha Stores' says that, in the morning of the day of the incident, accused came to his stores and asked for a sharp cutting manna knife and bought a one. Witness Kirihoda says that shortly after the incident in question, he saw the accused hiding a knife (which he clearly saw as blood stained) behind a bush;

   (iii) Witness Kirinaide says that about a week prior to the incident the accused shot at the deceased with a shot gun, but since the shot missed the target no harm was cased to the deceased. Witness also says that, at the time of the incident there was an attempted murder case pending against the accused for attempting to kill one Gunapala by shooting.

   (iv) Investigating police officer had observed signs of a struggle and blood stains at the place of the incident, and states that the accused had run away from the village after the incident and was arrested three days thereafter, whilst hiding in a jungle. He also confirms the fact that there was a case pending against the accused for attempting to kill one Gunapala.

7. A confession made by an accused person is admissible in a criminal trial provided the safeguard set out in the Evidence Ordinance is met.

   Critically examine validity of the above statement with reference to relevant statutory provisions and decided cases of Sri Lanka.